3rd August 1966]

ஏழைகளுக்கு வழக்காட உதவி

* 59 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவில் வழக்குகளில் வழக்காட இயலாத ஏழை மக்களுக்கு, கோர்ட்டு பீஸுக்கு உதவி செய்வதுபோல், வழக்கறிஞர்கள் இலவசமாக ஆஜர் ஆவதற்கு வகை செய்யும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No Sir.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, ஏழைகளாக இருக்கிறவர்கள் தங்களுடைய சொத்துக்கள் சம்பந்தமாக கேஸ்கள் போட்டு நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதால், தங்களுடைய சொத்துக்களை இழக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய, கிரிமினல் கேசுகளில் போல, இலவசமாக வழக்கறிஞர்களைக் கொடுத்து உதவ ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்ததில், செலவு அதிகமாகப் போகும் என்பதால், எமர்ஜன்சி காரணமாகவும் அத்தகைய யோசனை நடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கோட்டக்குப்பம் பஞ்சாயத்து

* 60 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கோட்டக் குப்பம் பஞ்சாயத்தை மேஜர் பஞ்சாயத்தாக்க கோரிய தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இந்தக் கோரிக்கை சென்னை கிராம வளர்ச்சி நெறியாளரிடம் வந்தது.

(இ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நா பஞ்சாயத்துச் சட்டத்தின்படி நகரப் பஞ்சாயத்தாகப் பாகுபடுத்துவதற்குள்ள தகுதிகளை இப் பஞ்சாயத்து பெறாததால் இக் கோரிக்கை கிராம வளர்ச்சி நெறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கோட்டக் குப்பம் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக ஆக்க முடியவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படி

யில்லையென்றாலும், ஆறு, ஏழு மைல் நீளத்திற்குக் கிராமங்கள் தனித்தனியாக இணைந்திருக்கின்றன. தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நகரப் பஞ்சாயத்தாக ஆக்கு வதற்கு ஐயாயிரம் மக்கள் தொகை வேண்டும்; பத்தாயிரம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அதற்குச் சற்று குறைவாக இருக்கிறது. அந்த மக்கள் தொகையும் வருமானமும் வந்துவிட்டால் டவுன் பஞ்சாயத்தாக ஆக்கிவிடலாம். வளர்ச்சியுள்ள நகரத்தை விட்டு கிராமப் பஞ்சாயத்தாக ஆக்குவதும் முறை அல்ல. அதற்காக மனு சர்க்காரிடம் வரவில்லை. மனு வேண்டுமானல் அனுப்பலாம். அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கோட்டக் குப்பம் பஞ்சாயத்தை மேஜர் பஞ்சாயத்தாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, வளர்ச்சி மன்றமும் சிபார்சு செய்து அனுப்பப்பட்டது. குறிப்பிட்ட மக்கள் தொகை இல்லாததால், அதை மேஜர் பஞ்சாயத்தாக ஆக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதன் பிறகு, பல பகுதிகளிலிருந்தும், அந்தக் கிராமங்களிலிருந்தும் தனிப் பஞ்சாயத்தாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று மனுக்கள் சர்க்காருக்கு அனுப்பியதாகக் கேள்விப்பட்டேன். அதையாவது பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மனுக்கள் வந்ததாக ஞாபகம் இல்லை. கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்துக் கொண்டால் பரிசீலிக்கலாம் என்று முன்பே ஒரு கேள்விக்குப் பதில் அளித் திருக்கிறேன்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—EXPRESSION OF REGRET BY A MEMBER

MR. SPEAKER: I would like to know the views of the Leaders of Parties on the conduct of hon. Member, Sri K. R. Nallasivam, while raising an adjournment motion in the House on 2nd August 1966.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பொருத்தவரை யிலும், ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கனம் உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் கொண்டுவந்தார்கள். அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு உரியதா என்ற முறையில் தாங்கள் விவாதத்திற்கு விட்டு, அவரை அதுபற்றிக் கருத்தைக் கூறும்படியாகக் கேட்டுக்கொண்டீர்கள். அதன் பேரில் கருத்துத் தெரிவித்தார். அரசினர் தன்னுடைய கோரிக்கைக்கு இணங்கவில்லை என்பதைத் தெரிவிக்கும் வகை யிலும், முதலமைச்சர் அவர்கள் அதைப் பொருத்து ஒரு வாக்கு றுதியோ, அதைப் பொருத்த கருத்தோ தெரிவிப்பார்களானல் அது தனக்குச் சமாதானம் அளிக்க முடியும் என்ற வகையிலும்